பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 136 வெள்ளி 29-06-1990 (ஆனி 15) துல்ஹஜ்ஜா 05

UNIVERSAL FOR GOD AND COUNTRY
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

UNIVERSAL FOR GOD AND COUNTRY
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

★ அவசர அலுவல்கள் கருதிச் சென்று சிக்கியுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்களை

# கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டுவர முயற்சி

கொழும்பில் அகதிகளாகச் சிக்கியுள்ள வடபகுதித் தமிழர்களை கப்பல் மூலமாக இங்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான முயற்சியை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தற்போது எடுத்து வருகின்றது.

பல்வேறு அலுவல்களின் பொருட்டும் கொழும்புக்குச் சென்றவடபகுதியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தற்பொழுது அங்கு அகதிகளாகத்தங்கியுள்ளனர்.

தரைமார்க்கப் போக்கு வரத்து எதுவுமற்ற நிலை தற்பொழுது நீடிப்பதால் அவர்கள் இங்கு தத்தம் பகுதிகளுக்கு திருப்பமுடியாத நிலை தோன்றியுள்ளது.

கொழும்பிலிருந்து அல்லலுறும் இவர்களை விசேட பஸ்கள் மூலமாக யாழ்ப்பணத்திற்கு அழைத்துவர முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன

எனினும் இந்த பஸ்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டதை அடுத்து அம் முயற்சிகள் கைவிடப்பட்டன.

1983 இனக் கலவரத்தின் பின்கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக தமிழ் அகதிகளை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்கானமுயற்சிஇதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (4 கி)

## உங்கள் கவனத்திற்கு

தற்போதைய சூழ்நிலை காரணமாக 'முரசொலி' நிறுவனம் கல்வியங்காட்டில் டச்வீதியில் உள்ள லக்ஷ்மி கட்டிடத்திற்கு (ஆடியபாதம் வீதி, ராச வீதிச் சந்தியில் வைத்திய கலாநிதி இராமசாமி வீட்டிலிருந்து 100 யார் தூரத்தில்) மாற்றப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களும், விளம்பரதாரர்களும் இம்முகவரியுடன் தொடர்புகொள்ளவும். எதிர்பாராத அசௌகரியங்களால் உங்கள்அபிமான'முரசொலி' கடந்த சில தினங்களாக வெளிவரவில்லை. இன்று முதல் முரசொலி தன் பணியைத் தொடரும் என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகி
முரசொலி

## யாழ்நகர் வந்த அம்மாணவர் நிலை; தகவல் இல்லை

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்திலிருந்து கடந்த 14ந் திகதி யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த 50மாணவர்களின் நிலைபற்றிய தகவல் எதுவும் யாழ்ப்பாணத்திற்கு இன்னமும் கிடைக்கவில்லை.

இவர்களுக்கு நடந்த கதி என்ன என்பது குறித்து பல வித சந்தேகங்களும் எழுப்பப் படுகின்றன அச்சமும்மேலோங்கியுள்ளது.

இதுபற்றி யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்று முரசொலிக்கு தகவல் தெரிவிக்கையில் ''இவர்கள்தொடர்பாக தகவல் பெறுவதற்கு தாம் முனைப்பாக முனைந்துள்ளதாகவும், நேற்றும்தாம் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலய வானொலி ஸ்தாபனமூடாக பல்கலைகழக மானியஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகேயுடன் தொடர்பு கொண்டதாகவும் சொன்னார். '4-ஸ்ரீ'

## அகதிகள் அதிகரிப்பு

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் சம்பவங்களின் எதிரொலியாக யாழ்மாவட்டத்தில் சுமார் 150 ஆயிரம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அண்ணனுக்கு உதவவந்து

அண்ணன் வீட்டுக்கு உதவ வந்தவர் உயிர் மின்சார வடிவில் பிரிந்தது.

இச்சம்பவம் கல்வியங்காட்டுப்பகுதியில் நிகழ்ந்துள்ளது.

கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞர் சம்பவதினம் தனது அண்ணன் வீட்டில் பதுங்குகுழி வெட்டுவதில் உதவும் பொருட்டு வந்ததாகவும் நடுநிசி வேளை

—04ஆம் பக்கம் பார்க்க

## கடற்படைச் சூட்டினால் 3 பிள்ளைகளின் தந்தைபலி

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மீனவர் ஒருவர் பலியானார்

மருதங்கேணி என்னுமிடத்தைச் சேர்ந்த கதிர்காமு விஜயரத்தினம் (வயது 30) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மேற்படி துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானவரா

—04 ஆம் பக்கம் பார்க்க

நேரடியாகத் தலையிட

## இந்தியாவுக்கு எண்ணம் இல்லை எனத்தெரிவிப்பு

இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நடைபெற்று வரும் சம்பவங்கள் குறித்து இந்திய அரசு தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புற்றும் பலர் கொல்லப்பட்டுள்ளதும் குறித்து மத்திய அரசு கவலையுறுகின்றது என்றும் ஆனால் ஸ்ரீ லங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிகழும் போராட்டத்தில் பிரதமர் திரு

—04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு நகர் இருளில்

(மட்டக்களப்பு)

இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவு, தண்ணீர் பஞ்சம் ஏற்படடுள்ளதாகவும், மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மாவட்டம் முழுவதும் இருளில் மூழ்கியுள்ளதாகவும் அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உடனடி முடிவு தேவை கலைஞர் பிரதமரிடம் வற்புறுத்து

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிகழும் ஸ்ரீலங்கா அரசின் தாக்குதல் குறித்து மீண்டும் தொலைபேசியில்பிரதமர்திரு.வி.பி சிங்குடன்தொடர்பு கொண்ட முதல்வர் கருணாநிதி இதற்கு உடனடி முடிவு காணப்பட வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்.

முந்தின செய்தி 4 ஆம் பக்கம்

# ஐம்பது ஆயிரம் சிங்கள இளைஞர் இராணுவத்தில் இணையத் துடிப்பு

ஸ்ரீ லங்கா அரசு தனது இராணுவபலத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

உடனடியாக இராணுவத்தில் சேருமாறு அரசு விடுத்த அழைப்பை அடுத்து நேற்று கொழும்பில் உள்ள இராணுவத்தலைமையகத்தில் 50ஆயிரம் அளவிலான சிங்கள இளைஞர்கள் திரண்டதாகப் புதுடில்லியில் இருந்து வெளியான தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலைத் தற்போதைய சூழ் நிலையில் எதிர் கொள்ள முடியாதுள்ளதால் ஸ்ரீலங்கா அரசு தனது படைபலத்தை இவ்விதத்தில் அதிகரிக்க முற்பட்டுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (ஸ்ரீ)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஆயிரக்கணக்கில் அகதிகள்

இடம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளில் தங்கியுள்ளார்கள் சுமார் 1000ற்கும் மேற்பட்ட குடும்புங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மாத்திரம் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 75 வீதமானவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாவர். ஏனையவர்கள் காங்கேசன்துறை, மயிலிட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் ஆவர்.

இவர்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியின் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கான வசதிகளை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபரும் கிராம சேவையாளர்களும், பொதுமக்களும் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் கடற்பாதையாலும், காட்டுப் பாதையாலும் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் குழந்தைகளே அதிகமானவர்கள்(43கி)

## றொக்கட் தாக்கல்

வல்வை குடியிருப்புக்களை நோக்கி ஹெலியில் இருந்து றொக்கட் லோஞ்சர்த் தாக்குதல் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த றொக்கட் லோஞ்சரின் உதிரிப்பாக நீளம் ஒரு அடி மூன்று அங்குலமாகவும் பாரிய தடித்த அலுமினியத் துண்டுகளாகவும் காணப்பட்டது. (39கி)

# பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் உடனடி நிவாரணம் பெற ஏற்பாடு

நடந்து கொண்டிருக்கும் வன்செயலினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு இடம் பெயர்ந்தோர் தாம் தற்பொழுது தங்கியுள்ள பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்டோர் விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பப் படிவம், இடம் பெயர்ந்தோரின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

### தான் புரிந்த 38 கொலைகள் பற்றி

## டயரியில் எழுதிவைத்திருந்த நபர் கொல்லப்பட்டார்

38 கொலைகளைப் புரிந்து மாத்தறை ஊறுபொக்கைப் பகுதியை ஆட்டிப்படைத்து வந்த தீவிரவாதத் தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டான்.

தகவல் ஒன்றின் பேரில் ஊறுபொக்கைப் பொலிஸார் ''றிச்சா'' என்றழைக்கப்படும் பிரஸ்தாப நபரைக் கைது செய்யச்சென்ற போது அவருக்கும் பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்தது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரிடமிருந்து துப்பாக்கி ஒன்றும் சில தோட்டாக்களும் டயரி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும்டயரிபரிசீலனை செய்யப்பட்ட போது 38 கொலைகளை இந்நபர் செய்த விபரங்கள் குறிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

## இணக்கம்

இந்திய வம்சாவளியினர் 'குடிபெயர்வு' விவகாரத்தை புதுடில்லியில் இந்தியாவும் இலங்கையும் கூட்டாக ஆராய இணக்கம் கண்டுள்ளன.

இ. தொ. கா, தலைவரும் உல்லாசப்பயணத்துறை கிராமியத் தொழிற்றுறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் இத்தகவலை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இலங்கை-இந்திய கூட்டுப் பொருளாதாரா ஆணைக் குழுவின் கூட்டம் புதுடில்லியில் அடுத்தமாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திலேயே இந்திய கடவுச்சீட்டுப்பெற்ற இந்திய வம்சாவழியினரின் குடிபெயர்வுப்பிரச்சினை தொடர்பாக இருநாடுகளும் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவை மேலும் விருத்திசெய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்த ஆணைக்குழுவின் கூட்டம் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

## ஹெலி தாக்குதலில் மின் நிலையம் சேதம்

நேற்று முன்தினம் மாலை நேரம் நல்லூர்ப் பகுதியை அண்டியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்ட ஹெலி றொக்கற் தாக்குதலால் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலுள்ள மின் நிலையம் ஒன்று பலத்த சேதத்திற் குள்ளாகியுள்ளது.

இதனால் அப்பகுதியில் மின் தடை ஏற்பட்டுள்ளது. 4கி

## தபால் சேவை முற்றாகப்பாதிப்பு

(நாயன்மார்கட்டு)

யாழ். குடா நாட்டுக்குள்ளேயான தபால் சேவைகள் கடந்த ஒருவாரகாலமாக முற்றாக ஸ்தம்பித மடைந்துள்ளன.

தற்பொழுது குடாநாட்டில் தபால் சேகரிப்பு வேலைகளோ அல்லது வினியோக வேலைகளோ மேற்கொள்ளப் படுவதில்லை.

கடந்த இருவாரகாலமாக வெளியூர் தபால் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(கி)

## பல்கலைக்கழகம் கடனுதவி

யாழ். பல்கலைக் கழகத்தில் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து கல்வியைத் தொடரும் மாணவர்களின் நலன் கருதி பல்கலைக்கழகம் உடனடியாக முயற்சியை மேற்கொண்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து இங்கு வந்து கல்விபயிலும் மாணவர்களுக்கு கடனுதவியாக தலா 200 ரூபா வழங்கப்படுமென்றும் அதனை கல்வியாண்டு தொடங்கும்போது மாணவர்கள் மீள அளிக்கலாம் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தவிர யாழ். தென்னிந்திய திருச்சபையும் மேற்கூறிய மாணவர்களுக்கு 200 ரூபா நன்கொடை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது 4ஸ்ரீ

## எயிட்ஸ் நோயாளி மரணம்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ்நோயாளி என கண்டுபிடிக்கப்பட்டவண்ணார் பண்னையைச் சேர்ந்தவர் நேற்று முன் தினம் மரணமடைந்தார்.

இவர் உகண்டா நாட்டிற்கு சென்று திரும்பியிருந்தார் இவர் யாழ்ப்பாணத்தில் இரண்டாவதாக இறந்த எயிட்ஸ் நோயாளியாவர், 03

## அச்சம் காரணம்

வவுனியா நகரில் இருந்து பெருமளவிலான தமிழர்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் உள்ள பாடசாலைகள் ஆலயங்கள் போன்றவற்றில் தங்கியுள்ள அகதிகள் தங்கள் மீது எவ்வேளையிலும் தாக்குதல் நடாத்தப்படலாம் என்ற காரணத்தினாலே அங்கிருந்து வெளியேறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. 03

## பாடசாலைகள் மூடப்பட்டன

வடமராட்சி கிழக்கில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. ஓரிரு பாடசாலைகளே இயங்கிவருகின்றன.

இடம் பெயர்ந்து வந்த மக்கள் இப்பாடசாலைகளில் தங்கியிருப்பதன் காரணமாகவே இப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்து வரும் மக்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் ஏனைய பாடசாலைகளும் மூடப்படலாம் என நம்பப் படுகிறது. (43கி)

## இவ்வேளையில் இவ்வேலை

ஈச்சமோட்டை, பாசையூர், மகேந்திரபுரம் பகுதிகளில் சட்டவிரோதமாக வடிசாராய விற்பனையில் ஈடுபட்டுள்ளோரை தமிழீழ விடுதலைப் புலிகள் இரவு வேளை மடக்கிப்பிடித்தனர். இவர்கள் முன்பும் பல தடவைகள் வடிசாராய விற்பனையில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டு எச்சரித்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (52 ஸ்ரீ)

---

படிவ இல:........................

## பாதிக்கப்பட்டவர்கட்கான நிவாரணம்

1. நிரந்தர வசிப்பிடமுள்ள,

அ) உதவி அரசாங்க அதிபர் பிரிவு ;..............................

ஆ) கிராமசேவை அலுவலர் பிரிவு;..............................

2. இடம்பெயர்ந்திருக்கும்

அ) உதவி அரசாங்க அதிபர் பிரிவு;..............................

ஆ) கிராம சேவை அலுவலர் பிரிவு;..............................

3. குடும்பத் தலைவரின் பெயரும், அடையாள அட்டை இலக்கமும்;..............................

..............................

4, நிரந்தர விலாசம்;..............................

5. தற்போது வசிக்கும் விலாசம்; ..............................

6. அ) குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை; ..............................

| (ஆ) | குடும்ப அங்கத்தவர்களின் பெயர்கள் | உறவு முறை | உணவு முத்திரை இலக்கம் ★ |
|---|---|---|---|
| | | | |

★ உணவு முத்திரை இல்லையெனில், ''ஜனசக்தி'' இலக்கம், நிவாரண குடும்பப் பதிவு இலக்கம் ஆகியவை பதியவும்.

7. உணவு முத்திரைப் பொருட்கள் பெறப்படும் கூ. ச. கிளை இல; / உத்தரவு பெற்ற வியாபாரியின் பெயர்;..............................

8. இடம்பெயர்ந்தோர் உணவுப் பொருட்களைப் பெறவிரும்பும் கூ. ச. கிளை இல: / உத்தரவு பெற்ற வியாபாரியின் பெயர்: ..............................

திகதி ........................ ..............................

குடும்பத் தலைவரின் கையொப்பம்

9. கிராமசேவையாளரின் விதப்புரை

..............................

கிராம சேவை அலுவலர் கையொப்பம்

10. உதவி அரசாங்க அதிபரின் பணிப்பு;

..............................

உ. அ, அதிபர் கையொப்பம்

# சென். ஜோன்ஸ் தொண்டர்கள் சேவைக்கு அழைப்பு; இடம் பெயர்ந்தோருக்கு உதவுமாறு அறிவிப்பு

சுற்றாடல் கல்வி, சுகாதாரக்கல்வி ஆகியவற்றுடன் விஞ்ஞான முறையில் ஒழுங்கான மருத்துவ முதலுதவிப் பயிற்சியைப் பெற்ற சகல முதலுதவி ஆசிரியர் மற்றும் மாணவர்களை, இடம்பெயர்ந்து தங்கள் பகுதிகளில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவுமாறு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் வடபிராந்திய ஆணையாளர் சி. எஸ். சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலயம், கோப்பாய் அரசினர் ஆசிரியக் கல்லூரி, பலாலி அரசினர் ஆசிரியக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ், இந்துமகளிர் கல்லூரி, வேம்படிமகளிர் கல்லூரி சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, யாழ். கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை, சென் ஜோன்ஸ்கல்லூரி, யாழ், மத்தியகல்லூரி, சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பளை மகாவித்தியாலயம்·

மற்றும் சுன்னாகம் கிறிஸ்தவ திருச்சபை, பருத்தித்துறை போரூட் சுகாதாரத் தொண்டர் குழு, சிறுவர் பாடசாலைகுழு ஆசிரியர்கள், அறவழிப் போராட்டக் குழு, சத்திய சாய்பாபா தொண்டர்குழு, வவுனியா கூட்டுறவு மகளிர் பிரிவு, வவுனியா கிறிஸ்தவ இளைஞர் சங்கம் ஆகியவற்றிலுள்ள பிரிவுகள் முக்கியமாக சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேண்டியவர்களுக்கு முதலுதவி அளித்தல், நோய்கள் வராது பாதுகாக்கவழி வகுத்தல், சுகாதார விதிகளைப் பின்பற்ற அறிவுரை வழங்குதல், உணவு உடைகளை சேகரித்து வழங்குதல், பாதுகாப்பு முறைகளை அறியச்செய்தல், விபரங்களை சேகரித்து உரியவர்களுக்கு வழங்குதல் ஆகிய விடயங்களில் சென், ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவுகள் முக்கியமாக உதவி வழங்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (கி)

### அரசினர் மீது புலிகள் சாடல்

# நேருக்கு நேர் மோத திராணியற்றவர்கள்

தமிழ் பேசும் மக்களின் உணர்வலைகளை மதிக்காத, புரிந்துகொள்ளாத இலங்கை அரசுடன் பேசிப் பிரச்சினைகளைத்தீர்க்கமுடியாது என்ற நிலையில் இலங்கைத் தீவில் நாம் பிரிந்து வாழ்வதற்குரிய யுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்தியுள்ளோம்.

இதன் பிரகாரம் தமிழீழத்தில் பல்வேது இடங்களில் சிறீலங்காப் படையினரின் பல முகாம்களை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துப் போராடி யுத்தங்களையும் எம்மவர்கள் நடாத்தி வருகின்றனர்.

எம்முடன் நேருக்கு நேர் நின்று மோதமுடியாத சிங்கள இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களையும், தமிழர்களின் சொத்துக்களையும், ஆலயங்களையும், அகதிகள் முகாம்களையும், வைத்தியசாலைகளையும் விமானக் குண்டு வீச்சு மூலமும், துப்பாக்கி வேட்டுக்களாலும் அழித்துவருகின்றனர். ஆகவே மிகவும் கொடூரமான, ஈனத்தனமான இந்தச் சிங்களப் படையினரின் வெறியாட்டத்திற்கு ஆளாகாமல் மக்களாகிய நீங்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனவே நீங்கள் பதுங்குகுழிகளை அமைத்து, பதுக்கிவைத்திருக்கும் உணவுப் பொருட்களைக் கண்டுபிடித்து போர்க்காலத்தில் காயமுறும் போராளிகளைப் பராமரித்து இடம்பெயர்ந்து வருவோர்க்கு ஆதரவுத் வழங்குங்கள். மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரிவு தென்மராட்சி மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (ப- 5 நீ)

# கடற்படைப் படகு பாறைக்குள் சிக்கியது

கடந்த சில நாட்களாக புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய கடற்பகுதிகளில் ரோந்துகளை மேற்கொண்டு வந்த படகொன்று நயினாதீவுக் கடற் பகுதியின் பின்பாகவுள்ள கற்பாறை ஒன்றில் ஏறி சிக்கியுள்ளதினால் அதனை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

படையினர் அதி தீவிர முயற்சிகளை மீட்பதன் பொருட்டு மேற்கொண்டு வருகின்றார்கள்.

பல கடற்படைக்கப்பல்களின் உதவிகள் பெறப்பட்டிருந்த போதிலும் படையினர் படகை எடுத்துச் செல்ல முடியாத அவல நிலையில் இயந்திரங்களைப் பிரித்தெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப் படுவதாக பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். (20 ஸ்ரீ)

# கிராமவைத்திய சாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

வடக்கின் நகரப்பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் மூடப்பட்டதையடுத்து கிராமப்புற வைத்தியசாலைகளில் மருத்துவகைகளுக்குப் பெருமளவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மன்னார் போன்ற மாவட்டங்களில் உள்ள பல கிராம வைத்தியசாலைகள் மருந்து தட்டுப்பாட்டினால் மூடப்படும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் உள்ள தனியார் வைத்தியசாலைகளும் மூடப்பட்டு வருவதாகவுகி தெரிவிக்கப்படுகின்றது. (3ம்)

# பொருட்கள் தேக்கம், ஆனால் விலைகள் குறைய வில்லையே

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியே உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் எதையும் கொண்டு செல்ல முடியாத நிலை உள்ளது எனப்படுகின்றபோதிலும் பொருட்களின் விலைகள் இங்கு குறைந்தபாடில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெங்காயம், பீற்றூட் முதலானவை இங்கு தேங்கிக்கிடக்கின்ற போதிலும் விலையைக் குறைப்பதற்கு உற்பத்தியாளர் மசிவதாகத் தெரியவில்லையாம்.

இன்னாரன்ன தொல்லைகளால் மக்கள் அல்லலுறும் வேளை மனிதாபிமானம் பேணப்பட வேண்டமா எனக் கேட்கப்டுகின்றது. (ஸ்ரீ)

### புலிகளின் மீதான கோபம்

# புலிப் பல் அணிந்திருந்த இளைஞன் மீது கடுந்தாக்கு

யாழ்கோட்டை செல்தாக்குதல்களை அடுத்து ஒரு வார காலமாக நயினாதீவு கடற்படையினர் மீண்டும் சோதனைகளை நடத்தி வருகின்றனர்,

இந்த சோதனையின்போது பிரயாணிகள் படகுக கடற்படைத்தளத்தில் தரிக்கச் செய்யப்பட்டு தீவிரமாக சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

படையினரின் கெடுபிடிகள் காரணமாக நெடுந் தீவுக்கான படகுச் சேவைகள் ஒருவார காலமாக நிறுத்தப்பட்டிருந்தன.

பின்னர் நெடுந்தீவிலிருந்து குறிக்கட்டுவான் நோக்கிபடகு சேவை ஒன்று நடைபெற்றது.

அதில் பயணம் செய்த கழுத்தில் புலிப்பல்லு போட்டிருந்த இளைஞன் ஒருவர் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளமையும் அதேசமயம் வயோதிபர் ஒருவரும் அந்த நிலைக்கு தள்ளப் பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (20- சீ)

# பஸ்சேவை முற்றாக ஸ்தம்பிதம்; மினிவான் கட்டணம் அதிகரிப்பு

யாழ் குடாநாட்டு பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக கிளிநொச்சி சாலை யாழ்ப்பாணத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை நடாத்தி வந்தது.

எனினும் டீசல் பற்றாக்குறை காரணமாக அச்சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன,

குடாநாட்டில் பரவலாக மட்டுப்படுத்தப்பட்டஅளவில் மினிவான் சேவைகள் நடாத்தப்பட்டு வருகின்றபோதிலும் அவற்றின் கட்டணம் மிகையாக அதிகரிக்கப்பட்டுள்ளதனால் பலரும் சைக்கிள் வண்டிகள் மூலமே தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (கி)

# இன்று

கிறிஸ்துராசா தேவாலயம் கொய்யாத்தோட்டம், பத்திமாதா தேவாலயம், ஈச்சமோட்டை பீச்றோட், பாஷையூர் சென் அந்தனீஸ் பாடசாலை ஆகிய அகதி முகாம்களில் தங்கி இருக்கும் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களைப் பெறுவதற்கான உத்தரவுப் பத்திரம் ஈச்சமோட்டை கிராமசேவையாளர் ஏ. சுந்தரலிங்கத்தால் பாஷையூர் சென் அந்தனீஸ கல்யாண மண்டபத்தில் வைத்து இன்று வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (10சீ)

# கடற்படை அட்டூழியம் மீன்பிடிப் படகுகள் சேதம்

கடற் படையினரின் தாக்குதலால் மீன்பிடிப் படகுகள் சேதம் அடைந்தன. இரு குடும்பப் பெண்கள் காயமுற்றனர்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து பருத்தித்துறைப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் வல்வைப் பகுதியில் இருந்து பொலிகண்டி திக்கம் சக்கோட்டை இன் பருட்டி போன்ற பகுதியில் உள்ள மீன்பிடிப்படகுகளை நோக்கிச் ஷெல் தாக்குதல்கள் நடத்தினர்,

இதன் காரணமாக இன்பருட்டியில் இருந்து ஒரு மீன் பிடிப்படகும் பொலிகண்டியில் இருந்து ஐந்து படகுகளும் பெரும் சேதமடைந்ததுடன் பொலிகண்டியைச் சேர்ந்த திருமதி சின்னராசா மல்லிகைக்கண்டு (வயது 57) திருமதி பூபாலசிங்கம் தேவநாயகி(வயது32)என்னும் இரு பெண்கள் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். (39 ஸ்ரீ)

# தீவுப்பகுதிக் கடலில் வீரசூரயாவும் உஷார்

நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய கடற் பிராந்தியங்களில் நயினாதீவு கடற்படையினரின் ரோந்துகள் அதி தீவிரம் அடைந்து வருகின்றன.

சுமார் இருபதுக்குக் கூடுதலான படையினரின் விசைப் படகுகள் இந்த ரோந்துகளை இரவு பகலாக நடாத்தி வருகின்றன.

இந்த ரோந்துகளால் இரவு நேரங்களில் கரையோரப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரும் அச்சத்துடன் இருந்து வருவதைக் காண முடிகிறது.

அது மட்டுமல்லாமல் இரவு நேரங்களை கழிப்பதற்கு அப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து மீண்டும் வீடுகள் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

கடற் படையினரின் ரோந்துகள்நடைபெறுகின்றவேளைகளில் படையினரின் பாதுகாப்புக்காக வீர சூரயாவும் நங்கூரமிட்டுருப்பதை காணமுடிகிறது.

இந்த நிலைகளால் மீன்பிடி றோளர்களும் தொழிலுக்கு செல்வதில்லை அப்பகுதியில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்யட்டு வருகிறது. (20ஸ்ரீ)

# கொடிகாமம் பகுதியில் பத்தாயிரம் அகதிகள்

கொடிகாமம் பிரதேசத்தில் சுமார் பத்தாயிரம் அகதிகள் வந்து சோந்துள்ளனர்.

பலாலி, மல்லாகம், குரும்பசிட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி போன்ற பகுதிகளிலிருந்து இவ்அகதிகள் இடம்பெயர்ந்து வந்துள்ளனர். இவர்களுக்கான தேவைகளை செய்து கொடுப்பதில் கொடிகாமம் பிரதேச சிற்றூரவையினர் மேற்கொண்டுள்ளனர்.

இவர்களின் தேவைகளை கொடிகாமம் மாவட்டப் பொறுப்பாளர் ராகுலன் நேரில் சென்று பார்வையிட்டு வருகிறார். (ப.5கி)

# நீங்களும் செய்தியாளராகுங்கள்

தொடர்புகள் முற்றாக ஸ்தம்பித்துவிட்ட காலகட்டம் இது. ஒரு வாசகர் மற்ற வாசகர்களுக்கு முரசொலி மூலமாக எடுத்துச் சொல்லக் கூடிய செய்கள் பல இருக்கலாம்.

எனவே தங்கள் ஊரில் நிகழும் முக்கிய சம்பவங்களை ஆதாரங்களுடன் எங்களுக்கு நீங்கள் எழுதி அனுப்புங்கள்.

நீங்கள் எழுதும் செய்திகளை உங்கள் அயலிலுள்ள கிராம சேவகர், சமாதான நீதவான், பாடசாலை அதிபர் அல்லது யாராவது முக்கியஸ்தவர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தி நேரில் அல்லது உங்கள் பகுதி முரசொலி ஏஜன்ரிடம் ஒப்படையுங்கள்.

உங்கள் முயற்சிக்கு உகந்த சன்மானம் வழங்கப் படும்.

நிர்வாகி
முரசொலி

# ஆனையிறவிலும் ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமை அண்டியுள்ள கிராம மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இம்முகாமிலிருந்து ''ஷெல்' தாக்குதல்கள் மேற் கொள்ளப்படுவதினாலேயே இம் மக்கள் வெளியேறி வருகின்றனர்.

குறிஞ்சாத்தீவு, இயக்கச்சி, கோயில் வயல், சங்கத்தாவயல் ஆகிய பகுதி மக்களே இடம்பெயர்ந்துள்ளனர்(43கி)

### யாழ். நகரில்

# தாக்குதல் தொடரும் வேகத்தில் திருட்டுச் சம்பவங்களும் அதிகரிப்பு

(நாயன்மார்கட்டு)

யாழ். நகரில் ஷெல் மற்றும் ஆகாயத்தாக்குதல்கள் அதிகரித்துவரும் அதே வேகத்தில் திருட்டுச்சம்பவங்களும் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அனேகமான பகுதிகளில், தாக்குதல்களுக்கு அஞ்சி இடம் பெயர்ந்தோர் பலரின் வீடுகள் திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகியுள்ளதாக அறியப்படுகின்றது.

றக்கா றோட்டில் உள்ள வீடொன்றின் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்து இருபத்தியொரு பவுண் தங்க நகைகள் உட்படப் பல பெறுமதியான பொருட்கள் திருடப் பட்டுள்ளன. (கி)

## சார்க் மாநாடு

இவ்வாண்டு சார்க் மாநாடு மாலைதீவில் நடாத்துவதற்கு இலங்கை சம்மதம் தெரிவித்துள்ளது.

# இத்தம்பதிக்கு சோதனை இதயம் பிளக்கும் வகையில்

சிங்கள காடையர்களின் தாக்குதல்களிலிருந்து தப்பிக் கொள்வதற்காக பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடிய தம்பதிகள் தமது 4 வயதுப் பிள்ளையை தவறிவிட்ட பரிதாப சம்பவம்ஒன்று அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றுள்ளது. இத்தம்பதிகள் தற்போது வடமராட்சி கிழக்கிலுள்ள கட்டைக்காடு அகதி முகாமில் தங்கியுள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது திருகோணமலையின்தமிழ்க் கிராமம்ஒன்றில் கடந்த 23ம் திகதி நள்ளிரவு சிங்களக் காடையர்கள் புகுந்து கத்தி; வாள் கொண்டு தாக்கத்தொடங்கினர். தாக்குதலுக்குள்ளானவர்களின் அவலக் குரல் கேட்ட மேற்படி தம்பதிகள் படுக்கையில் இருந்து எழுந்து ஓடத் தொடங்கினர்

மனைவி ஒருபுறமும், கணவன் ஒரு புறமாக ஓடிய இவர்கள் அகதி முகாம் ஒன்றில் சந்தித்த போதே இவர்கள் தமது ஒரேவாரிசான பிள்ளையை தவறவிட்டுவந்தபரிதாபமானநிலையைத்தெரிந்து கொண்டனர்.

கணவன் பிள்ளையைக் கொண்டு சென்றிருப்பார் என மனைவியும் மனைவி பிள்ளையைக் கொண்டு சென்றிருப்பார் கணவனும் நினைத்தே தமது பிள்ளையைத் தாம் தவறவிட்டதாக மேற்படி தம்பதிகள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

தமது கிராமத்திற்கு திரும்பிச் சென்று பிள்ளையின் நிலையை அறியக் கூடிய சூழ்நிலை சிறிதும் இருக்கவில்லை எனவும் சிங்களக் காடையர்கள் ஈவு இரக்கமின்றி அங்கு இருந்தவர்களை வெட்டிக் கொண்றனர் எனவும் அத்தம்பதிகள் தெரிவித்தனர். (43)

# கொழும்பில் கைதான யாழ். மாணவர் நிலை என்ன?

வடகிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து கொழும்பில் யாழ்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது,

இதுபற்றிய தகவல்களைப் பெறுவதற்கு அவர்களது பெற்றோர் மிகவும் கரிசனையாக உள்ளதால் தகவல் பெற உதவுமாறு பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே யுடன் தொடர்பு கொண்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார். (4 ஸ்ரீ)

# ஸ்ரீலங்கா படைத்தாக்குதல் சிங்கிடம் மு. க. முறையீடு

வடக்கு, கிழக்குப் பகுதியில் வாழும் தமிழர்கள் மீது ஸ்ரீலங்காப் படைகள் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கை குறித்துத் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி பிரதமர் திரு. விஸ்வநாத் பிரதாப் சிங்கிடம் முறையிட்டுள்ளார். அநீதியானது இச் செயல் என அவர் பிரதமரிடம் தெரிவித்துள்ள கண்டனத்தின் போது குறிப்பிட்டார்.

# ஊர்ஜிதம் செய்தாக வேண்டுமெனும்நிர்ப்பந்தம்

கிழக்கு மாகாணத்தில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் பெருந்தொகையான இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் கைது செய்யப்படுபவர்கள் அந்த மாவட்டத்தை பிறப்பிடமாககொண்டவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும் என பாதுகாப்புப் படையினர் தெரிவிப்பதாக பொதுமக்கள் தெரிக்கின்றனர்.

இதனால் வெளிமாவட்டங்களை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களும், அரசாங்க ஊழியர்கள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீ

# திருமலை அகதிகளுக்காக வல்லையில் பல முகாம்கள்

திருமலையில் இருந்து இன்னமும் பெருமளவில் அகதிகள் வந்தவண்ணமுள்ளனர்.

இவர்களுக்கு உணவு,உடை தங்கும் இடவசதிகளை யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினர் செய்து வருகிறார்கள் செஞ்சிலுவைச்சங்க சேவைகள் பூரண நிறைவு பெறுவதற்கு எரிபொருள்தட்டுப்பாடு தடையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலையிலிருந்து மேலும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்துசேரும் அகதிகளுக்கு உதவு முகமாக புதுக்குடியிருப் சீ.சீ.பாடசாலை, புதுக்குடியிருப்பு கமநல சேவைநிலையம் உடையார்கட்டு பாடசாலை முல்லைதீவு கட்டிட த்திணைக்களம், குமுழமுனை ஐக்கிய நாணயச்சங்கம் அலம்பில், செம்மலைமகாவித்தியாலயம் முள்ளியவளை,வற்றாப்பளை கொக்குத்தொடுவாய், போன்ற இடங்களில் செஞ்சிலுவைச்சங்கத்தினர் முகாம்களை அமைத்துள்ளனர் திருமனல அகதிகளுடன் மட்டக்களப்பு அகதிகளுக்கும் மருந்து உணவுப்பொருட்கள், உடைகள் இருப்பிடவசதிகள்செய்து வருகின்றார்கள். -39

## இந்தியாவுக்கு...

வி. பி. சிங் நேரடியாகத் தலையிடும் எண்ணம் இல்லை என்றும்தெரிவிக்கப்படுகிறது.

ஒன்று பட்ட இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே இந்திய அரசின் நிலைப்பாடு என்றும் தெரிவிக்கப்படுகிறது

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு அகதிகள் பெருமளவில் வருவர் என்ற அச்சம் இந்தியாவுக்கு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஸ்ரீ

வல்வைக்கடற்பிராந்தியத்தில்

# கப்பல் நடமாட்டத்தி[...] கலக்கம் எந்நேரமும்[...]

வல்வைக்கடலில் கடற்படையினரின் அட்டகாசத்தால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்பதோடு பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றார்கள்,

கடற்படையினர் வல்வைப் பகுதிக் கடற்பிராயந்யத்தின் ஊடாக ரோந்து சேவை செய்யும் போது தினம்தினம் எந்த நேரத்திலும் தாக்குதல் செய்த வண்ணம்உள்ளார்கள்.

இதன் காரணமாக கடற்படையிரின் கப்பல் சத்தங்கள் அவர்களதுநடமாட்டம்போன்றவை தெரிந்தவுடன் மக்கள் வெருண்டு மறைவிடங்கள் நேக்கி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது,

கடந்த ஒருவாரமாக படையினரின் தாக்குதாலல் பிளாஸரிக் படகு எரிந்ததுடன் ஒன்பது படகுகள் சேதமாக்கப்பட்டன.

வல்வை முன்னாள் பிரசைகள் குழுத்தலைவர் திரு. எஸ செல்வேந்திராவின் வீடு உட்பட பத்து வீடுகள் றோமன் கத்தோலிக்க தேவாலயம் போன்றவை சேதமாக்கப்பட்டன.

எட்டுப் பொது[...] காயப்படுத்தப்பட்டு[...] வைத்தியசாலையில் சி[...] பெற்று வருகின்றார்கள்.

# கட்டை வண்டி, கட்டை வண்[...] காப்பாற்ற வந்த வண்டி

குடாநாட்டில் எரிபொருளுக்குப் பலத்த தட்டுப்ப[...] ஏற்பட்டுள்ளதால் வாகனப் போக்குவரத்துக்[...] வெகுவாகக் குறைந்து விட்டன.

மக்கள் கால் நடையிலும், துவிச்சக்கரவண்டிகளிலு[...] கூடுதலாகத் தம் கருமத்தை மேற்கொள்கின்றன[...] வீதிகளில் தற்போது பழைய காலம்போல் மாட்[...] வண்டிப் பயணங்களையும் கூடுதலாகக் காணமுடிகின்றது.

அகதிகளாக ஊர்விட்டு ஊர் பெயர்வோருக்கு மாட்[...] வண்டியே உற்ற துணையாகின்றது. ஸ்ரீ

# அகதிகளுக்கு உதவ "போரூட்[...] ஸ்தாபனத்திடம் நிதி இல்லை[...]

திருகோணமலை, காங்கேசன்துறை மயிலிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி கிழக்கில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களுக்கு பொதுஸதாபனங்கள் எவற்றின் உதவியும் கிடைக்க வில்லையாம்

வடமராட்சிப் பகுதிக்கு "போரூட் ஸ்தாபனமே உதவியளிக்கும் என செஞ்சிலுவைச் சங்கம் போன்றதொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளதுடன் வடமராட்சி கிழக்கு அகதிகளுக்கு உதவ முன் வரவும் இல்லையாம்.

"போரூட்" ஸதாபனத்தைவடமராட்சி கிழக்கு [...]திகள் அணுகிய போது [...]மிடம் நிதி இல்லை என மேற்படி ஸதாபனம் கைவிரித்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது

இதேவேளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் இப்பகுதியில் இருக்கும் அகதிகளுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். -43-

## தீனதயாளன் தகவல்

உரிய ஆவணங்களின்றி திருச்சியில் தங்கியிருந்த ஒன்பது இலங்கைத் தமிழர்கள் நேற்று கைது செய்யப்பட்டதாக மாவட்டஆட்சித்தலைவர் திரு தீனதயாளன் தெரிவித்தார்.

திருச்சியிலுள்ள அகதி முகாமில் 900 இலங்கைத் தமிழர்கள் இருப்பதாகவும் இவர்களில் 93 பேர் 1983ம் ஆண்டிலிருந்து இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு

றன.

இராணுவக் கொடுமைகளிலிருந்து தம்மைபாதுகாத்துக் கொள்வதற்காக அடர்ந்த காடுகளினூடாக மக்கள் கால் நடையாக மாவட்டத்தை விட்டு வெளியேறி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பிலிருந்து வெளியேறிய மக்கள் சிலர் திருகோணமலையை கடந்து அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகள்—

மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துளார்கள் என அறிய வருகிறது.

30 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் 217 பராமரிப்பு நிலையங்களில் தற்போது தங்கியுள்ளார்கள் இதேவேளை தொடர்ந்து பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன.

இந்த அகதிகளுக்கான நிவாரணப்பணிகளில் அவ்வப்பகுதி உதவி அரசங்க அதிபர் பணிமனைகள் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 03

அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

# பொதுமக்கள் தாக்கப்பட்டமை விமானப்படையினரின் தவறா[...]

வடக்குக் கிழக்கில் பொது மக்கள் குடியிருப்புகள் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீசி தாக்கியதில் பொது மக்கள் பலர் பலியானதாக அமைச்சர்ரஞ்சன் விஜயரத்னா நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில் ஒப்புக் கொண்டார்.

விமானப்படை விமா[...]களின் குண்டு வீச்[...] பொதுமக்கள் பலியான [...]யம் விமானப்படை அதி[...]களின் தவறே என அ[...] தெரிவித்தார்.

வர்த்தக நிலையங்க[...] பொது மக்களின் குடியிரு[...]களும் விமானக் குண்டுவீச்[...] சேதமடைந்தமையும் பொ[...] மக்கள் கொல்லப்பட்ட[...]யும் தமது அமைச்சின் [...] உள்ள விமானப்படை அதி[...]ரிகளின் செயல் என்ப[...] அமைச்சர் ரஞ்சன் வி[...]ரத்னா ஏற்றுக்கொண்டா[...]

## கடற்படை...

வார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது நேற்றுமுன்தினம் படகு ஒன்றில் ஜெயா என்பவரும் மேற்படி நபரும் மீன் பிடிக்கச் சென்றனராம் அதிகாலையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினர் இவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்தனர் எனவும் தலையில் துப்பாக்கி சூடு பட்ட விஜயரத்தினம் என்ற மீனவர் ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள்மீன்பிடிக்க சென்ற படகும் பலத்த சேதத்திற்கு உள்ளானது.

இச்சம்பவத்தையடுத்து அச்சம் காரணமாக மீனவர்கள் எவரும் இப்பகுதியில் மீன்பிடிக்க செல்வதில்லை.

கடற்படையினர் தொடர்ந்து பீரங்கி தாக்குதல்களையும் மேற் கொண்டு வருகின்றனர். (43)

## புலிக்குப் பலி இவர்கள்

வடக்குக் கிழக்கில் கட[...] இருவாரங்களாக நடந்த [...] தலைப் புலிகள்—ஸ்ரீ லங்[...] இராணுவ மோதலில் [...] வரை 140 ஸ்ரீலங்காப் ப[...] வீரர்கள் பலியான தாக[...] 200 படையினர் காயமடை[...]ததாகவும் பாதுகாப்பு அமை[...]சின் செயலாளர் சிறில்ர[...]துங்க நேற்று பத்திரிகைய[...]ளர் மகாநாட்டில் தெரிவ[...]தார்.

## அண்ணனுக்கு...

இவ்வேலைநடைபெற்றபோ[...] பிக்கானை உயர்த்தி[...]டியபோது கம்பி அறு[...] ஸ்தலத்திலேயே இறந்தத[...]வும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால யாழ். கஸ்தூரியார் [...]டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 29-6-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.